நகராட்சி அலுவலகம், ஆத்தூர்,
சேலம் மாவட்டம்,
நாள். 29.11.2023.

## அவசரக்கூட்டம்

அன்புடையீர்,

இந்நகர்மன்றம் நவம்பர்–2023 ஆம் மாத அவசரக்கூட்டம் வருகிற 30.11.2023 ஆம் தேதி வியாழன்கிழமை மாலை 4.00 மணிக்கு தந்தை பெரியார் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெற உள்ளது. கூட்டபொருள்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நாங்கள் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர். 29/11/2023
ஆத்தூர் நகர்மன்றம்.

## தீர்மானப்பொருள்

<u>பொருள்-1</u>

ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18 முதல் 33 வரையுள்ள பகுதிகளின் குடிநீர் குழாய்களில் ஏற்படும் உடைப்புகள் மற்றும் அடைப்புகள் குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்காக ஜிஐ குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யவும் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிகள் தொடர்ந்து செய்ய ஆகும் தோராய மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு நகர் மன்றம் தனது தீர்மானம் எண்781, நாள்29.09.2023–ல் அனுமதி வழங்கியதன் பேரில் மேற்படி பணிக்கு 31.10.2023-ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்த புள்ளிகளை முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எ ண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | சதவீதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | M/S ஸ்ரீபழநி இன்ஜினியரிங் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரார், ஆத்தூர். | 0.03%மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | திரு.ஆர்.செல்லக்கண்ணு ஒப்பந்ததாரர் ஆத்தூர் | 0.37%மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/Sஸ்ரீபழநிஇன்ஜினியரிங் ஒர்க்ஸ்ஒப்பந்ததாரார் ஆத்தூர், என்பவரின் 0.03% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்து உள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

பொருள்-2

ஆத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தின் நீதியரசர் அவர்கள் இந்நகராட்சி ஆணையர், பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் அவர்கள் நேரில் அழைத்து பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிப்பறை கட்டிடங்கள் பழுதுடைந்த நிலையில் உள்ளதாக பள்ளி மாணவிகளிடமிருந்து புகார் வந்துள்ளதாக மாண்புமிகு நீதியரசர் அவர்கள் தெரிவித்தார். அதன்படி, மேற்கண்ட நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் வடக்குபுறம் உள்ள பொது கழிப்பிட கட்டடம் ஆய்வு செய்யப்பட்டதில் பொது கழிப்பிடத்தில் கீழ்கண்ட குறைபாடுகள் கண்டறியப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

ஆண்கள் கழிவறை

1) டைல்ஸ் தரைதளம் சீரமைக்கப்படவேண்டும்
2) பீங்கான்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
3) பழுதடைந்த மின் விளக்குகள், குழாய்கள் மற்றும் டேப் மாற்றியமைக்கப்படவேண்டும்.

பெண்கள் கழிவறை

1) பீங்கான்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.
2) பழுதடைந்த டைல்ஸ் மாற்றியமைக்க வேண்டும்
3) பழுதடைந்த மின் விளக்குகள், குழாய்கள் மற்றும் டேப் மாற்றியமைக்கப்படவேண்டும்.

மற்றும் தேவையான அத்தியாவசிய மராத்து பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

பொருள்-3

இந்நகராட்சிக்கு சொந்தமான TN 77 E 7053 பொலிரோ ஜீப்பு வாகனத்தில் ஆயில் சர்வீஸ் மற்றும் தேவையான பராமரிப்பு பணிகள் செய்து தரக்கோரி ஓட்டுநர் அவர்கள் கடிதம்

உள்ளது. மேற்படி மின்மோட்டர் பழுதாகும் போது குடிநீர் விநியோகம் பாதிப்படையும் என்பதால் அதனை தவிர்க்கும் பொருட்டு 15 HP மின்மோட்டார் மற்றும் மின் உபகரணங்கள் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>பொருள்-8</u>

ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட அய்யனார் கோவில் ஏரி உள்ளூர் குடிநீர் ஆதாரமாக பயன்பட்டு வருகிறது. தற்போது ஏரியில் உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் இருந்து நீரேற்றும் செய்ய ஒரே ஒரு மின்மோட்டர் மட்டும் தான் உள்ளது. மேற்படி மின்மோட்டர் பழுதாகும் போது குடிநீர் விநியோகம் செய்ய பாதிப்படைவதால் தவிர்க்கும் பொருட்டு கூடுதலாக 20 HP மோட்டார் மற்றும் மின் உபகரணங்கள் பொருத்தவும் கூடுதல் மின்திறன் இணைப்பு பெற மின்மாற்றி பொருத்த தேவையான பணியும் மும்முனை இணைப்பு புதியதாக பெறவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>பொருள்-9</u>

ஆத்தூர் நகராட்சி பகுதியில் 12.11.2023 தீபாவளி பண்டிகையொட்டி பட்டாசு கடைகள் நகரின் வெளிப்புற பகுதியில் அமைக்கப்பட உள்ளதால் அக்கடைகள் அமைக்கும் இடத்தில் பொதுமக்கள் மற்றும் கடை உரிமையாளர்கள் அவர்களின் நலன்கருதி அடிப்படை வசதியான கழிப்பறை வசதி செய்துமாறு வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, இந்நகராட்சி எல்லை பகுதியான உப்புஓடை மெயின் ரோடு (பைபாஸ் ரோடு) அருகில் தற்காலிக Mobile Toilet பெட்டிகள் அமைக்கும் பணியினை மேற்கொள்ள குறுகிய காலம் உள்ளதால் அவசர அவசியம் கருதி 09.11.2023 அன்று விலைப்புள்ளி கோரி பணிமேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்தபுள்ளியின் விவரம் கீழ்கண்டவாறு–

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் | தொகை (GST மற்றும் போக்குவரத்து சேர்த்து) |
|---|---|---|
| 1 | M/s. WeCe Sanition, Chennai | ரூ.71,920 |
| 2 | M/s. Grand Traders, Madurai | ரூ.79,885 |
| 3 | M/s. Sansana, Kancheepuram | ரூ.87,080 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. WeCe Sanition, Chennai, என்பவர் குறைந்த விலைப்புள்ளி கொடுத்து உள்ளதை குறித்து முடிவு செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

6

<u>பொருள்-13</u>

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவு 1 முதல் 5 வரை உள்ள வார்டுகளில் பொது கழிப்பிடங்கள் மற்றும் சாக்கடைகள், கோடை திருவிழாக்களிலும், தெருக்களிலும் தெளிப்பதற்கு நீர்த்த சுண்ணாம்பு தூள் மற்றும் பிளீச்சிங் பவுடர் தேவைப்படுவதால் தயாரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி பெற்ற ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களுக்கு பணிஉத்திரவு வழங்கவும், உத்தேச செலவினத் தொகை ரூ.3.50 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவதற்கும் அனுமதிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>பொருள்-14</u>

ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பழுது நீக்கம் பணிக்காக வெட்டப்பட்ட சிமெண்ட் கற்கலான சாலைகள் (Paver Block) மற்றும் சிமெண்ட் சாலைகள் / தார்சாலைகள் தற்போது அந்த இடங்களில் பெரிய பள்ளங்களாக ஏற்பட்டு பொதுமக்களின் போக்குவரத்திற்கு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. பொதுமக்களின் பாதுகாப்பு கருதி மேற்கண்ட பகுதிகளில் சிமெண்ட் கற்களான சாலைகள் (Paver Block) மற்றும் சிமெண்ட் சாலைகளால் ஏற்பட்டுள்ள பள்ளங்களை சீரமைக்க ஆகும் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>பொருள்-15</u>

ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 கோட்டை அம்மன் நகர் பகுதிகளிலுள்ள ஆழ்துளை கிணற்றின் GI பைப்புகள் மற்றும் கேபிள்கள் பழுதடைந்துள்ளதால் ஆழ்துளை கிணற்றினை பயன்படுத்த நிலை உள்ளதால், பொதுமக்கள் தண்ணீருக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். பொதுமக்களின் நலன் கருதி பழுதடைந்துள்ள GI பைப்புகளுக்கு பதிலாக புதியதாக UPVC பைப் மற்றும் கேபிள்கள் இறக்கி தண்ணீர் வசதி செய்து கொடுக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.62,000–க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>பொருள்-16</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.33ல் புது சக்தி மாரியம்மன் கோவில் மற்றும் அண்ணாமலை தியேட்டர் முதல் தெரு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி இல்லாததால் அப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுவதால் மேற்படி பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப் லைன் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.1.95 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>பொருள்-13</u>

இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவு 1 முதல் 5 வரை உள்ள வார்டுகளில் பொது கழிப்பிடங்கள் மற்றும் சாக்கடைகள், கோடை திருவிழாக்களிலும், தெருக்களிலும் தெளிப்பதற்கு நீர்த்த சுண்ணாம்பு தூள் மற்றும் பிளீச்சிங் பவுடர் தேவைப்படுவதால் தயாரிப்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி பெற்ற ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் அவர்களுக்கு பணிஉத்திரவு வழங்கவும், உத்தேச செலினத் தொகை ரூ.3.50 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவதற்கும் அனுமதிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>பொருள்-14</u>

ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பழுது நீக்கம் பணிக்காக வெட்டப்பட்ட சிமெண்ட் கற்கலான சாலைகள் (Paver Block) மற்றும் சிமெண்ட் சாலைகள் / தார்சாலைகள் தற்போது அந்த இடங்களில் பெரிய பள்ளங்களாக ஏற்பட்டு பொதுமக்களின் போக்குவரத்திற்கு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. பொதுமக்களின் பாதுகாப்பு கருதி மேற்கண்ட பகுதிகளில் சிமெண்ட் கற்கலான சாலைகள் (Paver Block) மற்றும் சிமெண்ட் சாலைகளால் ஏற்பட்டுள்ள பள்ளங்களை சீரமைக்க ஆகும் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>பொருள்-15</u>

ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7 கோட்டை அம்மன் நகர் பகுதிகளிலுள்ள ஆழ்துளை கிணற்றின் GI பைப்புகள் மற்றும் கேபிள்கள் பழுதடைந்துள்ளதால் ஆழ்துளை கிணற்றினை பயன்படுத்த நிலை உள்ளதால், பொதுமக்கள் தண்ணீருக்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். பொதுமக்களின் நலன் கருதி பழுதடைந்துள்ள GI பைப்புகளுக்கு பதிலாக புதியதாக UPVC பைப் மற்றும் கேபிள்கள் இறக்கி தண்ணீர் வசதி செய்து கொடுக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.62,000–க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>பொருள்-16</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான வார்டு எண்.33ல் புது சக்தி மாரியம்மன் கோவில் மற்றும் அண்ணாமலை தியேட்டர் முதல் தெரு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி இல்லாததால் அப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பெரிதும் சிரமப்படுவதால் மேற்படி பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப் லைன் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.1.95 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>பொருள்-17</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.19ல் மணிமேகலை தெரு மற்றும் மாராச்சியர் தெரு பகுதிகளில் ஜி.ஐ.பைப் லைன் பழுதடைந்துள்ளதை எடுத்து விட்டு புதியதாக ஜி.ஐ.பைப் லைன் அமைத்து அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.0.70 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>பொருள்-18</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்3ல் புதிய கல்லாநத்தம் சாலை பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி இல்லாததால் அப்பகுதிகளில் வசிக்கும் பெரிதும் சிரமப்படுவதால் மேற்படி பகுதிகளில் பைப் லைன் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ஆகும்.செலவினத்தொகை ரூ 2.50இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு கோரப்படுகிறது.

<u>பொருள்-19</u>

ஆத்தூர் நகராட்சியில் 2023–2024 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் சமுதாய கழிப்பிடம் கட்டுவதற்கு 24.96 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.5990/2022/SBM2, நாள்.08.09.2023 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆத்தூர் நகராட்சியில் 10 ஆவது வார்டு உறுப்பினர் அவர்கள் மாரிமுத்து ரோடு பகுதியில் பொது கழிப்பிடம் கட்டப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது என்றும், தற்போது கழிப்பிடம் பயன்பாட்டில் இல்லாததால் பொது மக்கள் மிகவும் அவதிப்படுவதாகவும்,, மின்இணைப்பு முதலியவை உள்ளதாகவும், மேற்படி SBM திட்டத்தில் பழைய கழிப்பிடம் இடித்து விட்டு புதியதாக கட்டி தருமாறு தனது 27.09.2023 மற்றும் 28.11.2023 ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

மேற்படி இடம் நகரளவையின்படி வார்டு –D பிளாக்–13, நகரளவை எண்1–ல் சர்க்கார் புறம்போக்கு என வகைபடுத்தப்பட்டு வசிஷ்டநதி ஆறு என தாக்கல் செய்யப்பட்டுள்ள புலத்தில் அமைந்துள்ளதாக நகரசார் ஆய்வாளர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

ஆனாலும், மேற்படி இடத்தில் ஏற்கெனவே பொது மக்கள் உபயோகிக்கின்ற கழிப்பிடம் 30 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டு உபயோகத்தில் இருந்து வந்துள்ளது. தற்போது அந்த கழிப்பிடம் பழுதடைந்து பயன்பாட்டில் இல்லாததால் பொது மக்கள் கழிப்பிடத்திற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். இப்பகுதியில் பொது மக்கள் உபயோகப்படுத்தும் வகையில் வேறு தகுதியான இடம் கழிப்பிடம் கட்டுவதற்கு இல்லை.

எனவே, மேற்படி இடத்தில் பழைய கழிப்பிடத்தினை அப்புறப்படுத்தி விட்டு புதிய கழிப்பிடம் கட்டுவதற்கு திட்ட அறிக்கை தயார் செய்து சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**பொருள்-20** இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 6–ல் அவ்வையார் தெரு, கிருஷ்ணா தியேட்டர் கண்ணகி அம்மன் கோவில் தெரு பகுதியில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி இல்லாததால் அப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் பெரிதும் சிரமப்படுவதால் மேற்படி பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப் லைன் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ2.75 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள்-21**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 2–ல் நாடார் காலனி மற்றும் கந்தன் நகர் பகுதியில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி இல்லாததால் அப்பகுதிகளில் வசிக்கும் பொது மக்கள் பெரிதும் சிரமப்படுவதால் மேற்படி பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து பைப் லைன் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.1.85 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**பொருள்-22**

இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 14–ல் அங்கமுத்து தெரு பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றின் மின் மோட்டார் பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி புதியதாக மின் மோட்டார் பொருத்தவும் மற்றும் HDPE Hose அமைத்து அப்பகுதி பொது மக்களுக்கு குடிநீர் அல்லாத பயன்பாட்டிற்கு தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.1.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மன்றம் பதிவு செய்யலாம்.

தலைவர். 29/11/2022
ஆத்தூர் நகர்மன்றம்.